# அரசியல்துறை
# தமிழீழ விடுதலைப் புலிகள்

**08.07.2023**
தமிழீழம்.

**ஈழசினிமா எனும் போர்வையில் மறைந்துள்ள சதி அரசியலை முறியடிப்போம்.**

கடந்த சில வாரங்களாக தமிழீழத்திலும் புலத்திலும், சிறிலங்கா நாட்டில் உருவாக்கம் பெற்ற 'வெந்து தணிந்தது காடு' எனும் திரைப்படத்தை பற்றிய சர்ச்சையும் குழப்பமும் எம்மக்கள் மத்தியில் பரவலாக உருவாகியிருப்பதை உணர்கிறோம். இத்திரைப்படத்துக்கு எமது கண்டனத்தை தெரிவிப்பதற்கும் இத்திரைப்படமானது தமிழீழ விடுதலை போராட்டத்தையும் தமிழ்த்தேசிய கோட்பாட்டையும் எந்தவகையில் சிதைத்து சிங்கள மற்றும் உலக அரச பயங்கரவாதத்திற்கு துணை போகிறது என்றும் எம்மக்களுக்கு தெளிவூட்ட இந்த அறிக்கையை வெளியிடுகிறோம்.

விழிப்புதான் விடுதலைக்கான முதற்படி என்பதே தமிழீழ தேசியத் தலைவரின் சிந்தனைக்கரு. விடுதலை என்னும் பெரும் கனவை சுமந்து நிற்கும் உலகத்தமிழினம் மிகவும் உன்னிப்பாகவும் விழிப்புடனும் செயற்படவேண்டிய முக்கியமான தருணத்தில் இன்று இருக்கிறது. கருத்து மற்றும் ஊடக சுதந்திரம் முற்றாக மறுக்கப்பட்ட சிறிலங்கா நாட்டில் இருந்து அதனது இறையாண்மைக்கு உட்பட்டு எமது தாயகம், தேசியம் மற்றும் விடுதலை சார்ந்து நியாயமான படைப்புகளை எந்த ஒரு நேர்மையான படைப்பாளியாலும் வெளிக்கொண்டுவர முடியாது என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமே. இந்த அடிப்படையில் இத்திரைப்படமானது சிறீலங்கா அரச பயங்கரவாதத்தின் நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கமாகவே உருவாக்கம் பெற்றிருக்கின்றது என்ற உண்மையைப் புரிந்துகொள்வது கடினமான விடயம் அல்ல.

இப்படத்தின் இயக்குனரது சமீப கால பேட்டிகளும், எமது விடுதலை இயக்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் எதிரான சக்திகள் இத்திரைப்படத்திற்கு வழங்கும் ஆதரவும், ஒத்துழைப்பும் இந்த உண்மையை நிரூபித்துள்ளன. எம்மக்களை மேலும் கூறுபடுத்தி தமிழரின் ஒற்றுமையை குலைக்கும் எந்த ஒரு அரசபயங்கரவாத சதி நிகழ்ச்சி நிரல்களுக்கும் யாரும் அங்கீகாரத்தையோ அல்லது ஆதரவையோ அளித்து தமிழீழ விடுதலைச் செயற்பாடுகளை பலவீனப்படுத்தும் வரலாற்று தவறுகளுக்கு ஆளாகவேண்டாம் என்பதனை வலியுறுத்துகிறோம்.

இன்றும் உரிமைக்காக போராடிவரும் எம்மினம் மிகப்பெரும் இனப்படுகொலையை எதிர்கொண்டு அதற்கான நீதிகோரி தன்னெழுச்சிபெற்று போராடிக்கொண்டிருக்கும் இந்த வரலாற்றுச் சூழமைவில், தன்னை ஒரு படைப்பாளியாக அடையாளப்படுத்தும் ஒவ்வொருவரும் எமது இனம்,மொழி மற்றும் தேசவிடுதலை சார்ந்து பொறுப்புணர்வுடனும் கடமையுணர்வுடனும் அறத்துடனும் எவ்வாறு படைப்புகளை உருவாக்க வேண்டும் என்ற தெளிவுடனும், வரலாற்றுப் புரிதலுடனும் தங்கள் கலைப்படைப்புகளை வெளிக்கொணரவேண்டும்.

இந்த அடிப்படையில் நாம் மேற்குறிப்பிட்ட காரணங்களோடு ஒப்பிடும் போது வெந்து தணிந்தது காடு போன்ற திரைப்படங்கள் எமக்கான நீதியை மறுக்கும் ஒரு வடிவமாகவும், தமிழரின் வீரம்செறிந்த விடுதலைப்போராட்டத்தின் நியாயப்பாட்டை திசைதிருப்பும் ஒரு கருவியாகவும், தமிழீழ விடுதலைக்கு எதிரான சக்திகளால் எதிர்காலத்தில் கையாளப்படுவதற்கு காரணமாய் அமைந்துவிடும்.

எனவே இத்திரைப்படத்திற்கு பின்னால் உள்ள சதி அரசியலைப் புரிந்துகொண்டு இதனை முற்றுமுழுதாக புறக்கணிக்கவேண்டும்.

இதனை அங்கீகரிப்பதால் எமது தேசம் விடுதலை பெறவேண்டுமென்பதற்காய் வீரச்சாவடைந்த மாவீரரின் தியாகத்திற்கும், அர்ப்பணிப்புகளுக்கும், தமிழீழ இலட்சியத்திற்கும் மற்றும் எம்மக்கள் முன்னெடுத்துவரும் விடுதலைச் செயற்பாடுகளுக்கும் ஏற்படும் பாதிப்பை எம்மக்கள் அனைவருக்கும் தெளிவூட்டவே இந்த கண்டனத்தை வெளியிடுகிறோம்.

இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப வரலாற்று ஓட்டத்திற்கு அமைய கலை இலக்கிய கர்த்தாக்கள் புதுமையான, புரட்சிகரமான படைப்புக்களை உருவாக்க வேண்டும். எமது மொழியும், கலையும், பண்பாடும் எமது நீண்ட வரலாற்றின் விழுதுகளாக எமது மண்ணில் ஆழமாக வேரூன்றி நிற்பவை. எமது தேசிய வாழ்விற்கு ஆதாரமாய் நிற்பவை. எமது போராட்ட வாழ்வின் உண்மைகளைக் கலை இலக்கியப் படைப்புக்கள் தரிசித்துநிற்க வேண்டும். எமது சமூக வாழ்வியக்கத்தின் சகல பரிமாணங்களிலும் ஆழமாக ஊடுருவி நிற்கும் இன ஒடுக்குமுறையின் கொடுரத்தினை சிருஷ்டிகர்த்தாக்கள் சித்தரித்துக் காட்டவேண்டும்.

சரியான வரலாற்றை எம் தலைமுறைக்கு விட்டுச்செல்வதில் உறுதியாக பயணிப்போம்.

**“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”**

வி. ஜெயாத்தன்

வி. ஜெயாத்தன்
8/7/23

.............................

பொறுப்பாளர்

அரசியல்துறை

தமிழீழ விடுதலைப் புலிகள்